


காலம் வென்ற மூத்த தமிழ் அறிஞர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்
[Aug 2015 – Aug 2016]

## ஆசிரியர் தின விழா 11.09.2015 (புத்தனாம்பட்டி)

காலம் வென்ற மூத்த தமிழ் அறிஞர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழா குழுவின் சார்பில் இன்று 2015 செப்படம்பர் 11ஆம் நாள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், புத்தனாம்பட்டி நேரு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் தின விழா, இலக்கியமன்றத் துவக்கவிழா, டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழா என முப்பெரும் விழாவாக நடைபெற்றது.



முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமையாசிரியர் திரு.பி.கதிர்வேலு அவர்கள் தலைமை தாங்கினார். முதுகலை உதவித் தலைமையாசிரியர் திரு.எம்.பாலச்சந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறைவணக்கம் பாட நிகழ்ச்சி இனிதே துவங்கியது.



சிறப்பு விருந்தினராக இப்பள்ளியின் முன்னாள் மாணவரும் தற்போது சென்னை Dr. MGR பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறை தலைவராகவும் உள்ள திரு.அ.திருநாவுக்கரசு அவர்கள் கலந்து கொண்டு இலக்கியமன்றத்தை துவக்கி வைத்தும், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கியும், தனது பள்ளி அனுபவங்களை எடுத்துக்கூறி மாணவர்கள் எதிர்காலத்தில் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

இப்பள்ளியின் முன்னாள் மாணவரும், துறையூர் ஜெமிந்தார் மேல் நிலைப்பள்ளியின் ஓய்வு பெற்ற முதுகலை ஆசிரியருமான திரு.இராஜகோபால் அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர் தினம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

கோட்டாத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.பாஸ்கரன் அவர்கள் கலந்து கொண்டு நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக நூற்றாண்டு விழாக்குழுவின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சு.ராமலிங்கம் மற்றும் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் திரு.நாகேஷ் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பள்ளியின் தமிழ் ஆசிரியர் திரு.ஜே.மனோகரன் அவர்கள் நன்றி கூறினார். நாட்டுப்பண் பாட இனிதே விழா நிறைவு பெற்றது.

**மேலும் விபரங்களுக்கு**
**www.nasubbureddiar100.in என்ற இணையதள முகவரியில் பார்க்கவும்.**

(☺)(☺)(☺)(☺)(☺)